ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **85-T**
**Code No. : 85-T**

**RR+PR**

# ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ
# Subject : SOCIAL SCIENCE

**( ತಮಿಳು ಭಾಷಾಂತರ / Tamil Version )**

**( ಹಳೆ ಪಠ್ಯಕ್ರಮ / Old Syllabus )**

**( ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ + ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / Regular Repeater + Private Repeater )**

**பொதுவான குறிப்புகள் :**

i) இந்த வினா-விடைத்தாள் தொகுப்பானது புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 56-ஐ கொண்டுள்ளது.

ii) ஒவ்வொரு புறவயவகை (Objective type) வினாவிற்கான விடையை எழுத இடம் தரப்பட்டுள்ளது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அந்த விடைக் குறியீட்டு எழுத்துடன் விடையை முழுவதுமாக தரப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும்.

iii) அகவய வினாக்களின் (Subjective type questions) விடைகளை எழுதுவதற்கென போதுமான இடம் தரப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள இடத்திற்குள்ளாகவே நீவிர் விடையளிக்க வேண்டும்.

iv) புறவய மற்றும் அகவய வினாக்களுக்கு எதிராக தரப்பட்டுள்ள குறிப்புகளை கடைபிடிக்கவும்.

v) மாணாக்கர்கள் விடைகளை பென்சி ல் எழுதக்கூடாது. பென்சிலால் எழுதப்பட்ட விடைகள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது. (வரைபடங்கள், படங்கள் மற்றும் மேப்புகள் தவிர)

vi) பல்விடை வினாக்கள் (Multiple choice questions), கோடிட்ட இடத்தை நிரப்புதல் மற்றும் பொருத்துக வகை வினாக்களின் விடைகளில் சுரண்டுதல் / திரும்ப எழுதுதல் / குறியிடுதல்கள் அனுமதிக்கப்படாது. இவ்வாறு செய்தால் அவை மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.

vii) மாணாக்கர்கள் வினாத்தாளை படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளது.

viii) வலது பக்க ஓரத்தில் தரப்பட்டுள்ள இடத்தில் எதுவும் எழுத வேண்டாம்.

I. பின்வரும் வினாக்கள் / மற்றும் முழுமைபெறாத கூற்றுகளுக்கு நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே ஒன்று சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும். $15 \times 1 = 15$

1. உழுபவர்களின் நில உரிமையை நிரந்தரமாக்கிய நிலவரித் திட்டம் எது ?

   (A) இரயத்துவாரி முறை (B) மகல்வாரி முறை

   (C) ஜமீன்தாரி முறை (D) நிரந்தர நிலவருவாய்த் திட்டம்.

2. அரசியலமைப்பு சட்ட வரைவுக்குழுவின் தலைவராக இருந்தவர்

   (A) டாக்டர் பாபு இராஜேந்திர பிரசாத்

   (B) டாக்டர் பி.ஆர். அம்பேத்கார்

   (C) சர்தார் வல்லபாய் பட்டேல்

   (D) சரோஜினி நாயுடு.

3. போர்த்துக்கீசியர்களிடமிருந்து கோவா விடுதலை பெற்ற ஆண்டு

   (A) 1954 (B) 1963

   (C) 1961 (D) 1971.

4. கி.பி. 1966 ல் சீனாவில் ஏற்பட்ட பண்பாட்டுப் புரட்சியின் நோக்கம் ................. ஆகும்.

   (A) மஞ்சூரியாவி ருந்து ஜப்பானியர்களை வெளியேற்றுவது

   (B) மஞ்சு அரசர்களின் ஆட்சிக்கு முடிவு கட்டுவது

   (C) புத்த ஆலயங்களை இடித்துத் தகர்த்து புத்த சமயத்தவரைக் கொலை செய்தல்

   (D) மக்களாட்சியை ஏற்படுத்துவது.

5. ஜெர்மனியின் சர்வாதிகாரி .............................. ஆவார்.

   (A) ஹிட்லர் (B) முசோ னி

   (C) டி கௌலே (D) லெனின்.

6. கிராமப்புறப் பெண்களின் முன்னேற்றத்துக்காக ஏற்படுத்தப்பட்ட திட்டம்

(A) சுயம் சித்த திட்டம் (B) ராஷ்டிரிய மகிளா விமோச்சனா

(C) பா கா சம்ருத்தி யோஜனா (D) ஸ்ரீ சக்தி.

7. ...................................... ஆண்டு பெண்கள் அதிகார ஆண்டு என அறிவிக்கப்பட்டது.

(A) 2001 (B) 2005

(C) 1998 (D) 2004.

8. சார்க்கின் ( SAARC ) தலைமையகம் எங்குள்ளது ?

(A) கொழும்பு (B) காத்மண்டு

(C) டாக்கா (D) டெல் .

9. கோரமண்டல கடற்கரை பெருவாரியான மழையை எப்பருவத்தில் பெறுகிறது ?

(A) கோடை காலம்

(B) பருவக்காற்று பின்னடையும் காலம் (பின்மாரி)

(C) குளிர் காலம்

(D) தென்மேற்கு பருவக்காற்று மழைக்காலம்.

10. சதுப்பு நிலக்காடுகளில் காணப்படும் தொங்கும் வேர்களையுடைய மரங்களுக்கு சிறந்த உதாரணம்

(A) சந்தன மரம் (B) தேக்கு மரம்

(C) ஆலமரம் (D) மாமரம்.

11. பெட்ரோ யம் ஏன் திரவத் தங்கம் என்று அழைக்கப்படுகிறது ?

(A) அது அனைத்து பொருளாதாரப் பணிகளிலும் பயன்படுத்தப்படுகிறது

(B) அது திரவ நிலையிலுள்ளது

(C) அது ஏராளமாக கிடைக்கிறது

(D) அது தங்க நிறத்தைப் பெற்றுள்ளது.

12. இந்தியாவின் ரூர் ...................... ஆகும்.

(A) பீகார் (B) மேற்கு வங்காளம்

(C) சோட்டா நாக்பூர் பீடபூமி (D) ஜார்கண்ட்.

13. இந்திய தானியச் சேமிப்பு மையம் ......................................... ல் உள்ளது.

(A) மைசூர் (B) பீதர்

(C) குல்பர்கா (D) ஹாப்பூர்.

14. தொழில் வடிவமைப்பு மையங்கள் அமைக்கப்பட்டதின் நோக்கம் யாதெனில்

(A) இந்தியச் சூழலுக்கேற்ப இயந்திரங்களை வடிவமைத்தல்

(B) நிதியுதவி அளித்தல்

(C) விற்பனை வசதியளித்தல்

(D) தொழில்நுட்ப உதவியளித்தல்.

15. கருநாடகாவிலுள்ள அங்கோலா ...................................... போராட்டத்திற்கு புகழ்பெற்றது.

(A) மதுக்கடைகளை மூடும் போராட்டம்

(B) வன சத்தியாகிரகம்

(C) உப்பு சத்தியாகிரகம்

(D) துவாஜா சத்தியாகிரகம்.

II. கோடிட்ட இடத்தை சரியான வார்த்தையைக் கொண்டு நிரப்புக : $5 \times 1 = 5$

16. கடல் பயணத்தை ஊக்குவித்த முதல் நாடு ...................................... .

17. இந்தியாவில் மிக அதிகமாக மழைப்பொழிவைப் பெறும் இடம் ......................... ஆகும்.

18. ஒரு பொருளை வாங்குவதற்கு மற்றொரு பொருளை மாற்றிக் கொள்ளும் வாணிக முறை ......................................... ஆகும்.

19. ஊழலை எதிர்த்துப் போரிட அரசு ஏற்படுத்திய அமைப்பு ......................................... ஆகும்.

20. ஆப்கானிஸ்தானில் 2002-ல் அமெரிக்கா தோற்கடித்த அமைப்பு ................................. ஆகும்.

III. 21. **பட்டியல்-A** ஐ **பட்டியல்-B** யுடன் பொருத்துக. சரியான விடையைக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதவும் : 5 × 1 = 5

| **பட்டியல்-A** | **பட்டியல்-B** |
|---|---|
| (a) ஆரிய சமாஜம் | (i) ஜோதிபா பியூலே |
| (b) சத்திய சோதக் சமாஜம் | (ii) 1950 |
| (c) அ   கார் இயக்கம் | (iii) தயானந்த சரஸ்வதி |
| (d) இந்திய அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு | (iv) சர் சையத் அகமது கான் |
| (e) ரிசர்வ் வங்கியின் தோற்றம் | (v) இந்திய விடுதலைச் சட்டம், 1947 |
| | (vi) இந்திய அரசுச் சட்டம், 1935 |
| | (vii) Dr. ஆத்மாராம் பாண்டுரங் |
| | (viii) சுவாமி விவேகானந்தர் |

IV. பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு வாக்கியத்தில் விடையளிக்கவும்: 9 × 1 = 9

22. 'நவீன மைசூர் மாநிலச் சிற்பி' என அழைக்கப்படுபவர் யார் ?

23. சீனாவில் மஞ்சு அரசர்களின் ஆட்சிக்கு முடிவு கட்டிய தலைவர் யார் ?

24. இரண்டாம் உலகப் போரில் அமெரிக்கா ஏன் ஈடுபட்டது ?

25. வீட்டோ பவர் (ஒரே எதிர்வாக்குமுறை) என்றால் என்ன ?

26. அமெரிக்க காந்தியென அழைக்கப்படுபவர் யார் ?

27. மனித உரிமைகள் ஏன் மிகமிக அவசியமாகின்றன ?

28. சுந்தரவனக் காடுகள் எவ்வாறு அப்பெயரைப் பெற்றன ?

29. அடியகழ்தல் அல்லது தூர்வாருதல் ( dredging ) என்றால் என்ன ?

30. பசுமைப் புரட்சி என்றால் என்ன ?

V. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரு வாக்கியங்களில் விடை தருக: 16 × 2 = 32

31. சென்னை உடன்படிக்கையின் நிபந்தனைகள் யாவை ?

32. சீக்கியர்களின் புகழ்மிகு அரசர் என்று ரஞ்சித் சிங் ஏன் அழைக்கப்படுகிறார் ?

33. ஆங்கிலேயர் ஆட்சியின்போது போக்குவரத்தும் தகவல் தொடர்பும் எவ்வாறு இந்தியர்களை ஒன்றிணைக்கும் சாதனமாக விளங்கியது ?

34. ஈசூரில் நடைபெற்ற "வெள்ளையனே வெளியேறு இயக்கம்" பற்றி விவரி.

35. சர்தார் பட்டேல் ஐதராபாத் மீது ஏன் காவலர் படையின் தாக்குதலை மேற்கொண்டார் ?

36. முதல் உலகப் போரின்போது நிலவிய எதிர் கூட்டணி முறையை ( The system of Rival alliance ) விவரி.

37. "அக்மார்க்" முத்திரை ஏன் கட்டாயமாக்கப்பட்டது ?

38. ஐ.நா. சபையின் முக்கிய உறுப்புகள் யாவை ?

39. இந்திய அரசியலமைப்பு சட்டத்தின்படி எவ்வாறு மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன ?

40. மேற்கு மற்றும் கிழக்கு கடற்கரைகளுக்கு இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை ?

41. பாக்சைட் தாதுவின் பயன்கள் யாவை ?

42. சிமெண்டின் பயன்பாடு எவ்வாறு ஒரு நாட்டின் வளர்ச்சியைக் காட்டும் குறியீடாகக் கருதப்படுகிறது ?

43. தற்போது உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஏன் அதன் முக்கியத்துவத்தை இழந்து வருகிறது ?

44. சிறு தொழிற்சாலைகள் எவ்வாறு இயங்குகின்றன ?

45. மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் தோல்விக்கான காரணங்கள் யாவை ?

46. அணி சேரா இயக்கத்தின் ( Non-Aligned Movement ) தலைவர்கள் யாவர் ?

VI. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஆறு வாக்கியங்களில் விடையளி : $6 \times 3 = 18$

47. இந்தியாவில் போர்த்துக்கீசியர்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள் யாவை ?

48. கி.பி. 1857-ல் நடைபெற்ற பெரும் புரட்சியின் தோல்விக்கான காரணங்கள் யாவை?

49. பெண்களின் நிலையை உயர்த்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

50. மண் அரிப்பைத் தடுக்க மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் யாவை ?

51. கலப்பு வேளாண்மை எவ்வாறு வணிக வேளாண்மையி ருந்து வேறுபடுகிறது ?

52. சில்லரை வணிகர்கள் ஆற்றும் முக்கியத் தொண்டுகள் யாவை ?

VII. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் எட்டு வாக்கியங்களில் விடையளி : $3 \times 4 = 12$

53. இந்திய விடுதலை இயக்கத்தில் சுபாஷ் சந்திர போசு ஆற்றிய பங்கு என்ன ?

54. இந்தியா ரஷ்யாவுடன் எவ்வாறு ஒரு நல்ல உறவை மேற்கொண்டுள்ளது. விவரி.

55. இந்திய வேளாண்மை பின்தங்கியுள்ளதற்கான காரணங்கள் யாவை ?

VIII. 56. இந்திய தரைப்படம் வரைந்து பின்வருமிடங்களைக் குறிக்கவும்: $1 + 3 = 4$

a) காவேரி ஆறு

b) பக்ரா நங்கல் அணைத்திட்டம்

c) காண்ட்லா.

**பார்வைக் குறைபாடுள்ள மாணவர்களுக்கான மாற்று வினா *:* (வினா எண் 56க்கு மாற்று வினா)**

இந்தியர் வாழ்வில் இமயமலை எவ்வாறு ஒரு முக்கிய பங்காற்றுகிறது ? 4